# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | தேனி | காலம் : | 02/07/2022 | முதல் | 06/07/2022 |
| அறிக்கை எண் : | 052/ 2022 | வெளியீட்டு நாள் : | | 01/07/2022 | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37° - 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (28.06.2022 முதல் 30.06.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 06-07-2022- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28/06 | 29/06 | 30/06 | | தேதி | நாள்-1 02/07 | நாள்-2 03/07 | நாள்-3 04/07 | நாள்-4 05/07 | நாள்-5 06/07 |
| 0.0 | 2.4 | 1.2 | | மழை (மி.மீ) | 3 | 8 | 4 | 8 | 12 |
| 38 | 37 | 38 | | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 33 | 33 | 33 | 32 |
| 25 | 26 | 25 | | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 23 | 23 | 23 |
| 6 | 5 | 6 | | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| 59 | 69 | 61 | | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 46 | 44 | 54 | | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 7 | 11 | 11 | | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 12 | 12 | 12 |
| வட மேற்கு | வட மேற்கு | வட மேற்கு | | **காற்றின் திசை** | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32° - 33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 கி.மீ வேகத்தில், மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## கனமழை எச்சரிக்கை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் இடங்களில் ஜூலை 2, 5ம் தேதி இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரிசெய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும்,

கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்

அடுத்த இரு வாரத்திற்கான விரிவாக்கப்பட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (1-7 ஜூலை2022):

மழைப்பொழிவு :

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை ஒட்டிய மழைப் பொழிவு காணப்படும்.

அதிகபட்ச வெப்பநிலை :

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 28° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

குறைந்தபட்ச வெப்பநிலை :

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

இடி மின்னல் எச்சரிக்கை:

வரும் 2.07.2022 மற்றும் 3.07.2022 தேதிகளில் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 12 கி.மீ. வேகத்தில் காற்று எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : மக்காச்சோளம், மிளகாய் கால்நடை.**

**மக்காச்சோளம்:**

- மக்காச்சோளப் பயிரில் கதிர் துளைப்பான் கட்டுப்படுத்த விளக்கு பொறி அமைத்து அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

**மிளகாய்:**

- மிளகாயில் நாற்றழுகல் நோய் கட்டுப்படுத்த தாமிரப் பூசணக்கொல்லி மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் என்ற அளவில் நாற்றங்கால் நிலத்தில் ஊற்ற வேண்டும்.

**கால்நடை:**

- தொண்டை அடைப்பான் நோயானது பெரும்பாலும் மழைக் காலங்களிலேயே மிகுதியாக காணப்படுகிறது.
- கறவை மாடுகள் குறிப்பாக எருமை மாடுகள், கலப்பினப் பசுக்கள் இந்நோயால் அதிகம் பாதிக்கப்படுகின்றன.
- இதனை தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைக் காலத்திற்கு முன்பே அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி மாடுகளுக்கு தடுப்பூசி போடுவது அவசியம் ஆகும்.